செய்தி வெளியீடு எண்:313 நாள் : 29.06.2015

# செய்தி வெளியீடு

சார்ஜாவிலுள்ள ஓர் முன்னணி நிறுவனத்திற்கு பிரெஸ் டூல்ஸ் & ஷீட் மெட்டல் டை மேக்கர்கள், ஸ்டீல் ஸ்டிரக்சுரல் பேப்ரிகேட்டர்கள், மில்லிங் மெஷின் ஹெலிகல் கியர் கட்டிங் இயக்குபவர்கள் மற்றும் மெஷின் ஷாப் பிட்டர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலும், அரபு நாடுகளில் பணி அனுபவம் உள்ள தொழிற்சாலை உற்பத்தி மற்றும் பேப்ரிகேசன் மேலாளர்கள், பேப்ரிகேசன்/உற்பத்தி இன்ஜினியர்கள், குவாலிடி அஸ்சூரன்ஸ்/குவாலிடி கண்ட்ரோல் இன்ஜினியர்கள், ஐடிஐ தேர்ச்சி பெற்ற 4ஜி/மிக் வெல்டர்கள், கொத்தனார்/ஸ்டீல் பிக்சர்கள், ஹெவி டியூட்டி அக்யூரேட் டர்னர்கள், ஐக்கிய அரபு குடியரசின் செல்லத்தக்க இலகு மற்றும் கனரக ஓட்டுநர் உரிமம் எண் 3 & 4 வைத்துள்ள ஓட்டுநர்களும் தேவைப்படுகிறார்கள்.

4ஜி/மிக்வெல்டர், கொத்தனார் மற்றும் ஸ்டீல் பிக்சர்களுக்கு தொழில் திறன் செயல்முறை தேர்வு நடத்தப்படுவதால், தொலைபேசியில் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கான பணி விவரங்கள், அனுபவம், வயது வரம்பு, ஊதியம், மற்றும் இதர சலுகைகளை www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

எனவே, மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு உரிய தகுதி மற்றும் அனுபவம் இருப்பின் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன், கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் அசல் மற்றும் இரண்டு நகல்கள், வெள்ளை நிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட ஐந்து புகைப்படத்துடன் ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகம், எண்.42, ஆலந்தூர் சாலை, கிண்டி தொழிற்பேட்டை, சென்னை 600 032 என்ற முகவரியில் அமைந்துள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் 5.7.2015 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, 044–22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

நிர்வாக இயக்குநர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9